**சுருக்கம்**

தொழில்துறை - கனிமங்களும் சுரங்கங்களும் - மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை - மறு ஆய்வு விண்ணபம் (எம்.டி) எண்.80-82/2019 - வருவாய்த்துறை, காவல் துறை, வனத்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோருக்கு - வாகனங்கள் பறிமுதல் மற்றும் அபராதம் விதித்தல் தொடர்பான வழிகாட்டுதல்கள் - வழங்கியதன் தொடாபான ஆணைகள் பிறப்பித்தல்

---

அரசாணை (எம்.எஸ்) எண்.170 தொழில் (எம்.எம்.சி.2) துறை நாள்:05.08.2020

ஆடி 21 சார்வரி வருடம்

திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கவும்:-

1. அரசாணை (எம்.எஸ்) எண்.1464/தொழில்துறை, நாள்:08.12.21981.
2. அரசாணை (எம்.எஸ்) எண்.626/தொழில் (கே) துறை, நாள்:11.06.1986.
3. அரசாணை (எம்.எஸ்) எண்.167/தொழில் (எம்.எம்.சி1) துறை, நாள்.16.06.1994.
4. அரசாணை (எம்.எஸ்) எண்.4/தொழில் (எம்.எம்.சி1) துறை, நாள்:02.01.1998.
5. அரசாணை (எம்.எஸ்) எண்.114/தொழில் (எம்.எம்.சி1) துறை, நாள்:18.09.2006.
6. அரசாணை (எம்.எஸ்) எண்.12/தொழில் (எம்.எம்.சி1) துறை, நாள்:02.02.2009.
7. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக் கிளையின் ஆணைகள் நாள்:29.10.2018 டபிள்யு.பி. (எம்.டி) எண்.19936/2017 மற்றும் 7595/2018, மற்றும் டபிள்யு.பி. (எம்.டி) எண்.7525/2018.
8. இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண்.8981/எம்.எம்.6/2018, நாள்:27.11.2018 அனைத்து மாவட்ட ஆட்சித்தலைர்களுக்கும் முகவரியிடப்பட்டது.
9. அரசுக் கடித எண்.14148/தொழில் (எம்.எம்.சி.2) துறை/2018-2 மற்றும் 3, நாள்:05.12.2018 அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களுக்கு முகவரியிடப்பட்டது.
10. மாண்பமை உச்சநீதி மன்றத்தின் ஆணைகள் நாள்:11.01.2019 எம்.எல்.பி. (சி) எண்கள்.33477 - 33479/2018, நாள்:11.01.2019.
11. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை ஆணைகள் 09.09.2019 மற்றும் 12.09.2019, மறு ஆய்வு விண்ணப்பங்கள் ஆ.ஏ.(எம்.டி) எண்கள் 80 முதல் 82 வரை / 2019, டபிள்யு.பி. (எம்.டி) எண்கள்.19936/2017 மற்றும் 7595, 21485/2018.
12. இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அவர்களின் கடிதம் எண். ந.க.எண்.8981/எம்.எம்.6/2018, நாள்:17.03.2020.

ஆணைகள்:-

புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் வெள்ளாறு மற்றும் அக்கினி ஆறு ஆகியவற்றில் அரசின் அனுமதியின்றி மணல் அகழ்வுகள் செய்வதை தடுக்கக்கோரி, சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில், திருவாளர்கள் முத்து மற்றும்

பிறர் டபிள்யு.பி. (எம்.டி) எண்கள்.19936/2017, 7595 மற்றும் 21485/2018 ஆகியவற்றினைத் தொடுத்திருந்தனர். பார்வை 7-ல் காணும் ஆணைகளின்படி, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக்கிளை, அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லும் வாகனங்களை பறிமுதல் செய்வது தொடர்பான வழிமுறைகளை வகுத்துள்ளது. அவையாவன.

i) அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லும் வாகனங்களை கைப்பற்றுதல் செய்யும் சம்மந்தப்பட்ட வருவாய் துறையினர், ஒருவார காலத்திற்குள், சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் புகார் வடிவில் தெரிவிக்க வேண்டும். மேலும், அதன் பின்னர் மேற்படி வாகனங்களைப் பறிமுதல் செய்யத் தேவையான தகுந்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ii) காவல் துறையினர் இந்திய தண்டனைச் சட்டம் பரிவு எண்.379-ன்படி வழக்குகளை மேற்கண்ட வாகனம் பறிமுதல் இனத்தில் பதிவு செய்யத் தடை ஏதும் இல்லை. ஆனால் இந்திய தண்டனைச் சட்டம் 379-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், தனி நபர் புகார் அளிப்பது தொடர்பான வருவாய்த்துறையினரின் அதிகாரங்களை அது பாதிக்காது. மேலும், ஏற்கனவே தெரிந்தெடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி, வருவாயத்துறையினரை இந்த நீதிமன்றம், அரசு அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லும் வாகனங்கள் கைப்பற்றப்பட்ட விபரங்களைக் காவல்துறைக்கும், காவல் துறையின் இ.பி.கோ. பிரிவு 379-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்ட விபரங்களை வருவாய்த்துறைக்கும் தெரியப்படுத்த வேண்டும். ஆகையால், புகார் மனு வருவாய்த்துறையினரால் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஏற்படுத்தப்பட்டு அதன் விபரம் தெரிவிக்கப்பட்ட பின்னர் சம்மந்தப்பட்ட அதிகார வரம்புள்ள காவல் துறையினர் தகவல்களைப் பெற்று வழக்குப் பதிவு செய்ய வேண்டும். இந்த நடைமுறைகள் மிகுந்த பொறுப்புடன் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

iii) வாகனங்களைப் பறிமுதல் செய்தல் மற்றும் அதனை தொடர்ந்த தீர்வுறுதிகள் நீதிமன்றங்களைத் தவிர கனிமங்களும், சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் மேம்படுத்துதல்) 1957-ன் பரிவு 23-அ தொடர்பான குற்ற வழக்கு நிறுத்தி வைப்பு அதிகாரங்களைப் பெற்றவர்ளால் செயல்படுத்த வழி வகை இல்லை.

2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை இறுதியாக பின்வரும் வழிகாட்டுதல்களை பிறப்பித்துள்ளது.

i) வழக்கு எண் டபிள்யு.பி. (எம்.டி) எண்.9806/2018 மற்றும் அரசாணை எண்.(எம்.எஸ்) 135/தொழில் (எம்.எம்.ஏ.1) துறை, நாள்:13.11.2009-

ன்படி அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும் வட்ட அளவிலான பணி ஏற்புக் குழு மேற்படி அரசாணையின்படி முழு மூச்சுடன் திறம்படச் செய்யப்பட வேண்டும்.

ii) மேற்காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, காலவரையுடன் கூடிய தொடர் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும். கூட்ட நடைமுறையில் அரசின் அனுமதியின்றி கனிம அகழ்வுகள் செய்யப்படுவது தொடர்பாக கண்டறியப்பட்டு எடுக்கப்பட்ட மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையில் குறித்து விவாதிக்கப்பட வேண்டும்.

iii) கடமை தவறிய அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

iv) அரசால் அவ்வவ்போது பிறப்பிக்கப்படும் வழிகாட்டுதல்களுக்கு இணங்க வட்ட அளவிலான பணி ஏற்புக் குழுக்கள் அடிக்கடி முன்னறிவிப்பின்றி திடீர்த்தணிக்கைகள் மேற்கொண்டு அதன் விபரங்களை மாவட்ட அளவிலான பணி ஏற்புக் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

v) அரசாணையில் வலியுத்தப்பட்டபடி பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை குழுக்கூட்டங்கள் நடத்தப்படவேண்டும்.

vi) அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, தவறு செய்யும் கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் மாவட்ட அளவிலான பொறுப்பு அலுவலர் ஆகியோர் மீது விதிக்கப்பட்ட பொறுப்புகள் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

vii) எடுக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் விதிகளின்படி தக்க துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

viii) அரசின் அனுமதியின்றி கனிமங்கள், அகழ்ந்தெடுத்தல் மற்றும் கொண்டு செல்லப்படும் இனங்களை கண்டறிந்தது தொடர்பாக தனித்தனியாக பதிவேடுகள் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் மற்றும் மாவட்ட அளவிலான புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரிகள் ஏற்படுத்தி அதனை தவறாது பராமரிக்க வேண்டும்.

ix) அரசின் அனுமதியின்றி கனிம அகழ்வுகள், கொண்டு செல்லுதல் போன்றவை தொடர்பான அறிக்கைகள் உடனுக்குடன் பதிவேடுகளில் மற்றும் ஆவணங்களில் பதிவு செய்யப்பட வேண்டும்.

x) அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், வட்ட மற்றும் மாவட்ட அளவிலான பணியேற்புக் குழுக்கள் தொடர்பான விபரங்கள் உறுப்பினர்களின் தொலைபேசி / அலைபேசி எண்கள் ஆகியவற்றை விரிவான அளவில் பொதுமக்கள் அனைவருக்கும் அறிந்துக் கொள்ளக்கூடிய மற்றும் தெரியக்கூடிய வகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், துணை இயக்குநர் / உதவி இயககுநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை மாவட்ட அலுவலகம், மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோரின் தொலைபேசி எண்களுடன் விளம்பரபடுத்தப்பட வேண்டும்.

xi) நேரில் மற்றும் தொலைபேசி மூலம் வரப்பெறும் புகார் மனுக்கள் மீது அவை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து அவைகளை அனுப்பிய புகார் மனுதாரர்களுக்கு பதில் தெரிவிக்கப்பட வேண்டும்.

xii) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21-ன்படி அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ஒருவாரத்திற்குள் தகவல் அறியும் வண்ணம், வாகனக் கைப்பற்றுதல் குறித்த நடவடிக்கைகளைத் தெரியப்படுத்த வேண்டும்.

xiii) இறுதியான அறிக்கைகளை இந்திய தண்டனைச் சட்டம் 379-ன் கீழ் குற்றச் செயல்கள் குறித்து அதிகார வரம்பு கொண்ட நீதிபதி முன்பு, அதிகாரமளிக்கப்பட்ட காவல் துறையினர் பதிவு செய்வதுடன் அவற்றை சம்மந்தப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறான நடவடிக்கை தனி நபர் புகார் தொடர்பாக தகுந்த வகையில் ஒரே நீதிமன்றத்தால் எவ்வித இடர்பாடுகளும் இன்றி தொடரமுடியும்.

xiv) அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லப்படும் வாகனங்கள் கைப்பற்றுதல் செய்யப்படும் பொழுது, சம்மந்தப்பட்ட வருவாய்த்துறையினர், வாகனம் தொடர்பான நபர்களிடம் மேற்படி கைப்பற்றுதல் தொடர்பாக குறிப்பாணை மற்றும் வாகனம், கனிமம், கைப்பற்றுதல் செய்த விபரம் கைப்பற்றுதல் செய்த நாள் மற்றும் நேரம் ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

xv) கைப்பற்றப்பட்ட வாகனங்களைப் பொறுத்த வரையில் அவை சம்மந்தப்பட்ட உரிமையியல் நீதிமன்றம் முன்பு வருவாய்த்துறையினரால் புகார் மனுக்கள் பதிவு செய்யப்படும் சமயத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும்.

xvi) வாகனங்களை விடுவிக்கும் விண்ணப்பங்கள், அவை சம்மந்தப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களிலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

xvii) மேற்காணும் வழிமுறைகளைப் பின்பற்றத் தவறினால் அது சம்மந்தப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்காக, விண்ணப்பங்களை மாண்பமை உயர்நீதிமன்ற முதன்மை நீதிமன்றம் அல்லது அதன் பிற பெஞ்ச்களில் மாண்பமை முதன்மை நீதியரசர் வழிகாட்டுதல்களின்படி பதிவு செய்யப்பட வேண்டும்.

3. பார்வை 8-ல் கண்டுள்ள, இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களின் அறிவுறுத்தல்களின்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், பார்வை 7-ல் கண்டுள்ள டிவிசன் பெஞ்ச் மதுரை உயர்நீதிமன்றக் கிளை பிறப்பித்துள்ள ஆணைகளை நீக்கமறப் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். பார்வை 9-ல் கண்டுள்ள அரசு கடிதத்தின்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும், அரசாணை (எம்.எஸ்) எண்.135/தொழில் (எம்.எம்.ஏ.1) துறை, நாள்:13.11.2009 தொடர்பான விரிவான விளம்பரங்களை சுற்றறிக்கைகள், சுவரொட்டிகள், மற்றும் அறிவிக்கைகள் வாயிலாக பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், வருவாய் துறையினர், அரசின் அனுமதியின்றி கனிம அகழ்வுகள் செய்தல் மற்றும் வாகனங்களில் கொண்டு செல்லுதல், கைப்பற்றுதல் ஆகிய இனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளை பிறப்பித்த ஆணைகளின்படி நிறைவேற்ற பணிந்துள்ளது. மேலும், அரசு முதன்மை செயலர், தொழில்துறை அவர்கள் சார்பாக, இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களை மேற்காணும் நடவடிக்கைகளின் தொடர்பாக நிறைவேற்றுதல் அறிக்கைகளை உயர்நீதிமன்றம் சென்னைக்கு அளிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. சென்னை உயர்நீதிமன்றம், மதுரை டிவிசன் பெஞ்ச் அளித்துள்ள அரசு அனுமதியின்றி கனிமங்கள் எடுப்பது மற்றும் கொண்டு செல்வது ஆகிய குற்றச் செயல்கள் தொடர்பான குற்றவழக்கு மற்றும் நிறுத்தி வைப்புகள் ஆகியவற்றின் மீது மாண்பமை இந்தி உச்ச நீதி மன்றத்தில், தமிழக அரசின் சார்பில் எஸ்.எல்.பி. (சி) எண்கள்.33477 - 33479/2018 ஆகியவை மாவட்ட ஆட்சியர் புதுக்கோட்டை அவர்களால் தொடுக்கப்பட்டிருந்தவை அவற்றை தீர்வு செய்த மாண்பமை உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றத்தின் ஆணைகளில் தலையிட மறுத்து, மனுதாரரை, குறைகள் தொடர்பாக மாண்பனை உயர்நீதி மன்றத்தினை நாடும்படி பணிந்துள்ளது. அதன் மறு ஆய்வு விண்ணப்பங்கள், தமிழக அரசால் (எம்.டி) எண்.80 முதல் 82 வரை / 2019 ஆகியவற்றை டிபிள்யு.பி. (எம்டி) எண்.19939/2017, 7595 மற்றும் 21485/2018 ஆகியவைகளின்

அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை அவர்கள் மூலம் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடுத்தது.

5. மாண்பனை சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையில் டிவிசன் பெஞ்ச் மேற்படி மறு ஆய்வு மனுக்கள் மீது பின்வரும் வழிகாட்டுதல்களை பிறப்பித்துள்ளது.

i) அரசு முதன்மைச் செயலர், தொழில்துறை அவர்கள் தக்க அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை, சுற்றறிக்கைகள் மூலம் வாகனங்களை கைப்பற்றுதல் செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு அறிவித்து, அவர்கள் அதனை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது, குற்ற வழக்கு மற்றும் இணக்க ஒத்துசைவு ஆகியவற்றை கையாளுவது தொடர்பாக நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ii) அரசின் அங்கீகாரம் பெற்ற அலுவலர்கள், அரசு அனுமதியின்றி கனிமங்களை அகழ்ந்தெடுத்து வாகனங்களில் கொண்டு செல்லும் பொழுது அவற்றை கைப்பற்றி, பறிமுதல் செய்வது தொடர்பான தனிநபர் புகார்களை தட்டியமர்த்தப்பட்ட நீதிமன்றங்கள் கையாலும் வகையில் நடைமுறைப்படுத்தவும், அவை குற்ற ஒத்துசைவு நடவடிக்கைகளுக்கு குந்தகம் இன்றி இருக்கவும். மேற்படி அங்கீகாரம் பெற்ற அலுவலர்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றியும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

iii) அரசு அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லும் வாகனங்கள் மற்றும் கனிமங்கள் கைப்பற்றப்பட்டது அவைகளை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நீதிமன்றங்கள் முன்னிலையில் அவற்றை ஆஜர்படுத்த வேண்டும். மேலும், சம்மந்தப்பட்ட வாகனங்களை புகைப்படம் எடுத்து, இயக்கூர்தி ஆய்வாளரிடம் அறிக்கை பெற்று பொது ஏலத்தில் மேற்படி வாகனங்களை விட்டு அவற்றை பொது ஏலத்தில் கோரும், அதிகபட்ச ஏலதாரருக்கு ஒரு விற்பனை சான்றளித்து, ஏலத்தின் மூலம் பெறப்பட்ட தொகையினை சம்மந்தப்பட்ட இனத்தில் வரவு வைக்கவேண்டும். மேலும், விசாரணை நீதிமன்றம் வாகனப் பறிமுலுக்கு ஆணையிட்டிருந்தால் அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

iv) கைப்பற்றப்படும் வாகனங்கள், பறிமுதல் செய்யதேவையில்லை என்று சுட்டியந்தப்பட்ட நீதிமன்றங்கள் கருதுமேயானால் அவற்றை சட்டப்படி உரிமையுள்ளவர்கள் வசம் ஒப்படைக்கலாம்.

v) அவ்வாறு சம்மந்தப்பட்ட நீதிமன்றங்கள் நடவடிக்கை எடுக்கும்போது வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகளை சரி வரப் பின்பற்றப்படாத இனங்களில் நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி வாகனப் பறிமுதல் தொடர்பாக விண்ணப்பம் செய்த அதிகாரிகள், ஆணை கிடைக்கப்பெற்ற நான்குவார காலத்திற்குள் சான்றுறிதி ஆவணம் ஒன்றை தெரிவிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டும்.

6) மாண்பமை, சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் 12.09.2019-ம் தேதியிட்ட டபிள்யு.பி (எம்.டி) எண்.19936/2017, 7595 மற்றும் 21485/2018, நாள்.29.10.2018-ன் பத்தி 13-ல் உள்ள (ஔ) ஆணைகள் நீக்கப்படுகின்றன. கனிமங்களும், சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1957-ன்படி, தமிழ்நாடு சிறுகனிமம் சலுகை விதிகளின்படியும் பிடிபானை வேண்டாக்குற்றம் (Cognizance) தொடர்பாக சுட்டியமர்ந்தப்பட்ட (Designated) நீதிமன்றங்களில் நேரடியாகத்தாக்கல் செய்யலாம். இதனால் இடைநிலை ஆள்வரை (Jurisdictional) நீதிபதி முன்னிலையில் இவ்வாறான நிகழ்வு தவிர்க்கப்படும்.

7) இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களின், பாரனம் 12-ல் கண்டுள்ள கடிதத்தின்படி அரசுக்கும் பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளன அவற்றை கவனமுடன் ஆராய்ந்து பின்வரும் நடைமுறை வழிப்படுத்துதல்களை அரசு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் பிறப்பிக்கிறது.

அ) வருவாய்த்துறை, காவல்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோர், கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21(4)-ன்படி ( கையற்றுதல் அதிகாரம்) அதாவது அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லும் வாகனங்களைக் கைப்பற்றும் அதிகாரம் பெற்றவர்கள்.

**கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைபடுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21(4)-ன்படி அதிகாரம் அளித்து நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள்.**

i) அரசாணை எண்.(எம்.எஸ்) 1464/ தொழில்துறை நாள்.08.12.1986-ன்படி வருவாய்த்துறையில் துணை வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத பதவியில் உள்ளவர்களுக்கு செயல்முறைப்படுத்தும் சிறப்பு நீதிபதி (Special Executive Magistrate) நிலையும், குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973-ன் பிரிவு 20 (1)-ன்படியும், கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21 (4) ஆகியவைகளையும் நடைமுறைபடுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ii) அரசாணை எண்.(எம்.எஸ்) 626/தொழில (கே) துறை நாள்11.6.1986-ன்படி புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் உதவி இயக்குநர்கள், உதவி புவியியலாளர்கள், தனித்துணை வட்டாட்சியர் (கனிமம்) மற்றும் தனி வருவாய் ஆய்வாளர் (கனிமம்) ஆகியோருக்கு சிறப்பு செயல்முறைப்படுத்தும் நீதிபதி (Special Executive Magistrate) நிலையும், கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன்படி பிரிவு 21(4)-ன்படி நடவடிக்கைகளை அவர்களது ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

iii) அரசாணை (எம்.எஸ்) 114/ தொழில் ( எம்.எம்.சி1) துறை நாள்.18.9.2006-ன்படி காவல்துறையின் ஆய்வாளர் நிலைக்குக் குறையாத பதவியில் உள்ளவர்களுக்கு, கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைபடுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21 (4)-ன்படி அவர்களது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**அமலாக்கத் துறையினருக்கான வழிகாட்டுதல்கள்:**

a) வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறையில், கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன்படி அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டுசெல்லப்படும் பொழுது தங்களால் கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் கருவிகள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட காவல்துறையினர் வசம் ஒப்படைத்து, முதல் தகவல் அறிக்கை ஒன்றை குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது நடைமுறைப்படுத்தக் கோரவேண்டும். அவ்வாறு கோரும்பொழுது கைப்பற்றப்பட்ட வாகனம், கருவிகள் மற்றும் பிறவற்றை மகஜர் முதலான ஆவணங்களுடன் அளிக்க வேண்டும்.

b) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21(4)-ன்படி அதிகாரம் பெற்ற அலுவலர்கள், கைப்பற்றப்பட்ட கனிமங்கள் கிரானைட் தவிர பிற சிறுவகைக் கனிமங்களைச் சேர்ந்ததாயிருந்தால் சம்மந்தப்பட்ட வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு அவை பெருவகை மற்றும் கிரானைட் கனிம வகையைச் சேர்ந்ததாயிருந்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கும் குற்றவழக்கு நிறுத்திசைவு

(Compounding) தொடர்பான நடவடிக்கைகளைத் தொடர அறிக்கை செய்யப்படவேண்டும்.

ஆ. கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைபடுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு எண்.22-ன்படி அதிகாரம் பெற்ற வருவாய்த்துறை, வனத்துறை மற்றும் காவல்துறை ஆகியோர் சுட்டியமர்ந்தப்பட்ட (Designated) நீதிமன்றங்களில் புகார் அளித்தல் தொடர்பான வழிமுறைகள் (மேற்காணும் சட்டத்தில் பிரிவு எண்.22-ல் கூறப்பட்டுள்ள புகார் (Complaint) என்னும் வார்த்தை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி குற்றவழக்காக சம்மந்தப்பட்ட குற்றவியல் நீதிமன்றங்கள் முன்பாக, சான்றுதி ஆவணத்துடன், விண்ணப்பத்தொகையினைச் செலுத்தி உள்ளுர் அரசு வழக்கறிஞர் மூலம் செய்வதாகும். மேலும், சான்றுதி ஆவணம், மகஜர், கைபற்றப்பட்ட வாகனத்தின் ஆவணங்கள், காவல் துறையினரின் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் குற்றவழக்கு சம்மந்தப்பட்ட நபர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அதற்கான சான்று ஆகியவற்றுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைபடுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 22-ன்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கான செயல்திறன் (Perform) தொடர்பான அரசாணைகள்.**

i) அரசாணை எண்.(எம்.எஸ்) 4/தொழில் (எம்.எம்.சி1) துறை, நாள். 02.01.1998-ன்படி சம்மந்தப்பட்ட வருவாய்க் கோட்டாட்சியர்கள் கனிமங்களும் குவாரிகளும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு எண்.22-ன் கீழ் புகார் மனுக்களை, அவர்கள் அதிகாரவரப்பின் கீழ் கைப்பற்றப்படும் சிறுவகைக் கனிமங்களான, சாதாரணவகை கட்டிடம் கட்டும் கற்கள், சாலைகள் அமைக்கும் கற்கல், கிராவல், சாதாரணவகை மணல், மண், தூசிமண், களிமண், வண்டல்மண், செங்கல் மற்றும் தட்டு ஓடுகள் செய்யும் மண் ஆகியவை தொடர்பாக அளிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ii) அரசாணை எண். (எம்.எஸ்) 167/ தொழில் (எம்.எம்.சி1) துறை நாள்.2.2.2009-ன்படி சம்மந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர்கள், கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957 தொடர்பான பிரிவு எண்.22-ன் கீழ் சான்றுதி ஆவணம் மூலம் அவர்களது ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வழக்குகள் தொடர்பாக புகார் அளிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

iii) அரசாணை எண். (எம்.எஸ்) 12/ தொழில் (எம்.எம்.சி1) துறை நாள்.02.02.2009-ன்படி கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி

மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு எண்.22 தொடர்பாக மாவட்ட வன அதிகாரிகள் மற்றும் ஆய்வாளர் நிலைக்குக் குறையாத காவல் துறையினர் சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களில், அவர்களது ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக மேற்காணும் சட்டப்படி சான்றுதி ஆவணம் வாயிலாக எழுத்து மூலமான புகார் அளிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

**புகார் அளிக்கும் அதிகாகரம் பெற்றவர்களுக்கான வழிகாட்டுதல்கள்:**

a) அமலாக்கத்துறையினரிடமிருந்து பெருங்கனிமங்களான சுண்ணாம்புக்கல், மேக்னசைட், கடற்கரை மணல் கனிமங்கள் முதலானவைகள் தொடர்பான கைப்பற்றுதல் புகார் வரப்பெற்றவுடன் கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 22-ன்படி அதிகாரம் பெற்ற மாவட்ட ஆட்சியர்கள் சுட்டியமர்த்தப்பட்ட (Designated) நீதிமன்றங்கள் முன்பாக சான்றுதி ஆவணத்தின் மூலம் கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு எண்.21-ன் கீழ் நடைபெற்ற குற்றச்செயல் தொடர்பான புகார் மனுவினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

b) அமலாக்கத்துறையிலிருந்து சிறுவகைக் கனிமங்களான உடைகல், ஜல்லி, மணல், மண், கிராவல் முதலான கனிமங்கள் தொடர்பான கைப்பற்றுதல் அறிக்கைகள் பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட கோட்டாட்சியர்கள்/ சார் ஆட்சியர்கள், கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 22-ன்படி, சான்றுதி ஆவணம் வாயிலாக எழுத்துமூலமான புகார் மனுவினை, மேற்படி சட்டத்தின் பிரிவு எண்.21-ன்படி, குற்றமிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட சுட்டியமர்ந்தப்பட்ட நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கவேண்டும்.

c) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 4(1) மற்றும் 4(1-ஏ)-வின்படி குற்றவழக்கு நிறுத்திசைவு (Compounding) அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அமலாக்கத்துறையினரிடமிருந்து, கனிமங்கள் அரசு அதிகாரம் இன்றிக் கொண்டு செல்லப்பட்டது தொடர்பான அறிக்கைகள் பெறப்பட்டவுடன், மேற்படி சட்டத்தின் பிரிவு எண்.23-அ- வின்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர்கள், கோட்டாட்சியர்கள்/ சார் ஆட்சியர்கள் ஆகியோர் மேற்படி பிரிவு 23-

ஏ மற்றும் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959-ன் விதி எண்.36-ஏ-ன்கீழ் குற்றவழக்கு தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், மேற்காணும் நடவடிக்கைகள் குற்றம் தொடர்பான அபராதம் மற்றும் தொகைகளை வசூல் செய்வது மற்றும் சம்மந்தப்பட்ட நபரால் அரசுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பினைச் சரிசெய்வது மட்டுமேயாகும்.

d) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 22-ன்கீழ் அதிகாரம் பெற்றுள்ள ஆய்வாளர் நிலைக்குக் குறையாத பதவியில் உள்ள காவல்துறையினரை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு, சான்றுதி ஆவணம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள், கட்டணத் தொகை ஆகியவற்றுடன் மேற்படி பிரிவின்கீழ் தண்டனை அளிக்கத்தக்க தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற குற்றச்செயல்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

e) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு எண்.22 கீழ் அதிகாரம் பெற்றுள்ள மாவட்ட வன அலுவலர்கள் தங்கள் ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற, மேற்கண்ட பிரிவின் கீழ் தண்டனை அளிக்கத்தக்க குற்றச்செயல்கள் தொடர்பான விபரங்களை சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு சான்றுதி ஆவணம் கட்டணத்தொகை மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்க வேண்டும்.

**C. கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைபடுத்துதல்)**

**சட்டம் 1957-ன் பிரிவு 23-அ மற்றும் விதி எண்.36-அ தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள் 1959-ன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வருவாய்த்துறை மற்றும் வனத்துறை ஆகியோர் குற்றவழக்கு நிறுத்திசைவு (Compounding) அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பன வழிகாட்டுதல்கள்.**

**பிரிவு எண்.23-அ கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1957-ன் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர்களின் செயல்திறன்.**

i) அரசாணை எண்.(எம்.எஸ்) 166/தொழில்துறை, நாள்.16.06.1994-ன்படி தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள் 1959-ல் விதி எண்.36-ஏ ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும். அவ்விதிகளில் மாறுதல்களும் செய்யப்பட்டுள்ளன. அவற்றின்படி கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 4(1) மற்றும் (1-ஏ)-யின்படி விதிமீறல்கள் செய்பவர்களுக்கு அவ்வாறான

இனங்களில் அதிகபட்சமாக பதினைந்து மடங்கு உரிமத்தொகை குறைந்தபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) -க்கு குறைவில்லாத அபராதத்தொகையாக, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் அல்லது மாவட்ட வன அலுவலர்களால் கேட்பு ஏற்படுத்தி வசூல் செய்யப்படும் அல்லது மேற்காணும் சட்டத்தின் பிரிவு 21(1)-ன்படி தண்டனை அளிக்கப்படும்.

ii) அரசாணை எண்.(எம்.எஸ்.) 3/தொழில்துறை, நாள்.02.01.1998-ன்படி ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு சிறுகனிமம் சலுகை விதிகள் 1959-ன் விதி எண்.36-ஏ (1)-ன்படி சாதாரண வகை சிறுகனிமங்களை உடைகல், கிராவல், சாதாரணவகை மணல், மண், தூசிமண், சாதாரணவகை களிமண், வண்டல்மண், செங்கல் செய்யத்தேவையான மண், தட்டு ஓடு செய்யத்தேவையான மண் ஆகியவற்றை அரசின் அனுமதியின்றி அகற்றெடுத்து கொண்டு செல்லும்போது அவ்வகையான வாகனங்களைக் கைப்பற்றி அபராதம் அல்லது தண்டனை விதிக்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் சம்மந்தப்பட்ட கோட்டாட்சியர்களாலும் கையாளப்படலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

iii) அரசாணை எண்.(எம்.எஸ்.)4/ தொழில் (எம்.எம்.சி1) துறை, நாள்.02.01.1998-ன்படி கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21(5)-ன்படி மாநில அரசின் அதிகாரம் அவரவர்களின் அதிகாரவரம்புக்குட்பட்ட சம்மந்தப்பட்ட கோட்டாட்சியர்களாலும் கையாளப்படலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்கண்ட அதிகாரங்கள், சிறுவகைக் கனிமங்களான கட்டிடம் கட்ட உபயோகப்படும் சாதாரணவகை உடைகல், சாலைகள் அமைக்க உபயோகப்படும் கல், கிராவல், சாதாரணவகை மணல், மண், தூசிமண், சாதாரணவகை களிமண், வண்டல் மண், செங்கல் மற்றும் தட்டு ஓடு செய்யப்பயன்படும் மண் ஆகியவை தொடர்பாக மட்டுமே கையாளப்படவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டிருந்தது.

<u>குற்றவழக்கு நிறுத்திசைவு (Compounding) தொடர்பன அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கான வழிகாட்டுதல்கள்</u>

a) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு எண்.23-ஏ-யின்படியும், விதி எண்.36-ஏ தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள் 1959-ன்படியும், பெருவகைக் கனிமங்கள் (Major Minerals) மற்றும் கிரானைட் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு எண்.21(5)-ன் கீழ்

வரப்பெற்ற குற்றச்செயல்களை புரிந்தவர்கள் மீது சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் அமலாக்கப்பிரிவின் வாகனம் கைபற்றி அறிக்கைகள் வரப்பெற்றபின் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

b) அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டு செல்லப்படும் இனங்களில் அமலாக்கப் பிரிவினரின் வாகனம், கருவிகள் மற்றும் பிறவற்றை கைபற்றும் அறிக்கை பெறப்பட்டவுடன், கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 23-ஏ மற்றும் தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள் 1959-ன் விதி எண்.36-ஏ-யின்படியும் அதிகாரம் பெற்ற சம்மந்தப்பட்ட கோட்டாட்சியர்கள் / சார் ஆட்சியர்கள், கிரானைட் தவிர்த்த இதர கனிமங்களுக்கு குற்ற வழக்கு நிறுத்திசைவு (Compounding) தொடர்பான ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

c) கனிமங்களும் சுரங்கங்களும் (அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் பிரிவு 21(4-ஏ)-ன்படி கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட்களும். மேற்படி சட்டத்தின் பிரிவு எண். 21 (1)-ன்படி பிடி ஆணை வேண்டாக் குற்றம் (Congnizable Office) தொடர்பாக அதிகாரம்படைத்த நீதிமன்றம் மூலம் பறிமுதல் செய்யப்பட்டு. அந்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி தீர்வு செய்யப்படவேண்டும்.

d) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் மறு ஆய்வு விண்ணப்பங்கள் எண்.(எம்.டி.) 80 முதல் 82 வரை /2019 மீதான தீர்ப்பு நாள்.9.9.2019-ன்படி வருவாய்த்துறையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அரசின் அனுமதியின்றி கனிமங்கள் கொண்டுசெல்லும் வாகனங்களைக் கைப்பற்றுதல் மட்டுமே அவை தொடர்பான பறிமுதல் மற்றும் தீர்வு செய்யும் நடவடிக்கைகள் அல்ல என்றும், குற்ற வழக்கு நிறுத்திசைவு (Compounding) அல்லது குற்றவியல் நடவடிக்கை தொடர்பான புகார் அளிக்க அதிகாரம் பெற்ற அலுவலர் கைப்பற்றப்பட்ட வாகனத்தையோ, பிற பொருட்களையோ விடுவிக்க இயலாது என்றும், மேற்படி விடுவிப்பு மற்றும் பறிமுதல் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களாலேயே நிறைவேற்றப்படவேண்டும் என்றும் பகர்ந்துள்ளது. மேலும் குற்றவழக்கு நிறுத்திசைவு தொடர்பாக அதிகாரம் பெற்றுள்ள மாவட்ட ஆட்சியர்கள், கோட்டாட்சியர்கள் மற்றும் சார் ஆட்சியர்கள், கனிமங்களும் சுரங்கங்களும் ( அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன்படி அரசின் அனுமதியின்றி

கனிமங்கள் கொண்டுசென்றமைக்காக கைப்பற்றப்பட்ட வாகனங்கள், கருவிகள், கனிமங்கள் மற்றும் பிறவற்றை விடுவிக்க அதிகாரம் உடையவர்கள் அல்ல என்றும், எனவே, மேற்படி வாகனங்களை விடுவிக்க எந்த ஒரு ஆணையும் அவர்களால் பிறப்பிக்கப்படக்கூடாது எனவும், ஆனால் அவர்கள் குற்றவழக்கு நிறுத்திசைவு தொகை மற்றும் அபராதம் ஆகியவற்றை வசூல் செய்து மேற்படி குற்றச்செயல்களில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பினைச் சரிசெய்யலாம் எனவும், இதனை சம்மந்தப்பட்ட குற்றச்செயல் புரிந்த நபர் அரசுக்கு இழப்பீடு அளித்து தான் புரிந்த அரசின் அனுமதியற்ற கனிம அகழ்வுபணிக்கு ஈடு செய்துள்ளார் எனவும் கொள்ளலாம்.

8. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மேற்காணும் வழிகாட்டுதல்களை சிறந்த முறையில் நிறைவு செய்து அதன் விபரங்களை காலமுறை அறிக்கையாக அரசுக்கும், இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களுக்கும் அனுப்ப வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(மாண்பமை தமிழக ஆளுநர் அவர்களின் உத்தரவுப்படி)

என்.முருகானந்தம்
அரசு முதன்மைச் செயலர்

பெறுநர்:

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட வன அலுவலர்கள்
அனைத்து காவல்துறை கண்காணிப்பாளர்கள்
கூடுதல் அரசு முதன்மைச் செயலாளர், உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சென்னை-600009
அரசு முதன்மைச் செயலர், சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை-600009.
இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிண்டி, சென்னை-600032.

நகல்:

மாண்புமிகு சட்டம், நீதித்துறை, சிறைத்துறை மற்றும் கனிமங்களும் சுரங்கங்களும் துறை, அமைச்சர், சென்னை-600009
அரசு சட்டத்துறை, சென்னை-600009
தொழில்துறையின் கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான அனைத்துப் பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை-600009.
தொழில் (ஓபிII) துறை, சென்னை- 600009
இருப்புக்கோப்பு / எஸ்ஸிஸ்/ஆணைப்படி அனுப்பப்படல்/

பிரிவு அலுவலர்